ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

முதல்பத்து

______________

6-ஆம் திருமொழி - உய்யவுலகு

______*_______

உய்யஉலகுபடைத்துண்டமணிவயிறா!
ஊழிதோறூழிபல ஆலினிலையதன்மேல் *
பையஉயோகுதுயில்கொண்டபரம்பரனே!
பங்கயநீள்நயனத்துஅஞ்சனமேனியனே! *
செய்யவள்நின்னகலம்சேமமெனக்கருதிச்
செலவுபொலிமகரக்காதுதிகழ்ந்திலக *
ஐய! எனக்குஒருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (1)

கோளரியின்னுருவம்கொண்டுஅவுணனுடலம்
குருதிகுழம்பியெழக்கூருகிரால்குடைவாய்! *
மீளஅவன்மகனைமெய்ம்மைகொளக்கருதி
மேலையமரர்பதிமிக்குவெகுண்டுவர *
காளநன்மேகமவைகல்லொடுகால்பொழியக்
கருதிவரைக்குடையாக்காலிகள்காப்பவனே!*
ஆள! எனக்குஒருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (2)

நம்முடைநாயகனே! நான்மறையின்பொருளே!
நாவியுள்நற்கமலநான்முகனுக்கு * ஒருகால்
தம்மனையானவனே! தரணிதலமுழுதும்
தாரகையின்னுலகும்தடவிஅதன்புறமும் *
விம்மவளர்ந்தவனே! வேழமும்ஏழ்விடையும்
விரவியவேலைதனுள்வென்றுவருமவனே! *
அம்ம! எனக்குஒருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (3)

வானவர்தாம்மகிழவன்சகடமுருள

வஞ்சமுலைப்பேயின் @ நஞ்சமதுஉண்டவனே!*
கானகவல்விளவின்காயுதிரக்கருதிக்
கன்றதுகொண்டெறியும்கருநிறஎன்கன்றே! *
தேனுகனும்முரனும்திண்திறல்வெந்நரகன்
என்பவர்தாம்மடியச்செருவதிரச்செல்லும் *
ஆனை! எனக்குஒருகால் ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (4)

மத்தளவும்தயிரும்வார்குழல்நன்மடவார்
வைத்தனநெய்களவால்வாரிவிழுங்கி * ஒருங்கு-
ஒத்தஇணைமருதம்உன்னியவந்தவரை
ஊருகரத்தினெடும்உந்தியவெந்திறலோய்! *
முத்தினிளமுறுவல்முற்றவருவதன்முன்
முன்னமுகத்தணியார்மொய்குழல்களலைய *
அத்த! எனக்குஒருகால் ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (5)

காயமலர்நிறவா! கருமுகில்போலுருவா!
கானகமாமடுவில்காளியனுச்சியிலே *
தூயநடம்பயிலும்சுந்தரஎன்சிறுவா!
துங்கமதக்கரியின்கொம்புபறித்தவனே! *
ஆயமறிந்துபொருவான்எதிர்வந்தமல்லை
அந்தரமின்றியழித்தாடியதாளிணையாய்! *
ஆய! எனக்குஒருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (6)

துப்புடையாயர்கள்தம்சொல்வழுவாதுஒருகால்
தூயகருங்குழல்நல்தோகைமயிலனைய *
நப்பினைதந்திறமாநல்விடையேழவிய
நல்லதிறலுடையநாதனும்ஆனவனே!
தப்பினபிள்ளைகளைத்தனமிகுசோதிபுகத்
தனியொருதேர்கடவித்தாயொடுகூட்டிய * என்
அப்ப! எனக்குஒருகால்ஆடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே! ஆடுகஆடுகவே. (7)

* உன்னையும்ஒக்கலையில்கொண்டுதமில்மருவி
உன்னொடுதங்கள்கருத்தாயினசெய்துவரும் *
கன்னியரும்மகிழக்கண்டவர்கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப்பெற்றஎனக்குஅருளி *
மன்னுகுறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதிள்சூழ்
சோலைமலைக்கரசே! கண்ணபுரத்தமுதே! *
என்னவலம்களைவாய்! ஆடுகசெங்கீரை
ஏழுலகுமுடையாய்! ஆடுகஆடுகவே. (8)

பாலொடுநெய்தயிர்ஒண்சாந்தொடுசண்பகமும்
பங்கயம்நல்லகருப்பூரமும்நாறிவர *
கோலநறும்பவளச்செந்துவர்வாயினிடைக்
கோமளவெள்ளிமுளைப்போல்சிலபல்லிலக *
நீலநிறத்தழகாரைம்படையின்நடுவே
நின்கனிவாயமுதம்இற்றுமுறிந்துவிழ
ஏலுமறைப்பொருளே! ஆடுகசெங்கீரை

ஏழுலகுமுடையாய்! ஆடுகஆடுகவே. (9)

செங்கமலக்கழலில்சிற்றிதழ்போல்விரலில்
சேர்திகழாழிகளும்கிண்கிணியும் * அரையில்
தங்கியபொன்வடமும்தாளநன்மாதுளையின்
பூவொடுபொன்மணியும்மோதிரமும்கிறியும் *
மங்கலஐம்படையும்தோள்வளையும்குழையும்
மகரமும்வாளிகளும்சுட்டியும்ஒத்திலக *
எங்கள்குடிக்கரசே! ஆடுகசெங்கீரை
ஏழுலகுமுடையாய்! ஆடுகஆடுகவே. (10)

* அன்னமும்மீனுருவும்ஆளரியும்குறளும்
ஆமையுமானவனே! ஆயர்கள்நாயகனே! *
என்அவலம்களைவாய்! ஆடுகசெங்கீரை
ஏழுலகுமுடையாய்! ஆடுகவாடுகவென்று *
அன்னநடைமடவாள்அசோதையுகந்தபரிசு
ஆனபுகழ்ப்புதுவைப்பட்டனுரைத்ததமிழ் *
இன்னிசைமாலைகள்இப்பத்தும்வல்லார் உலகில்
எண்திசையும்புகழ்மிக்குஇன்பமதெய்துவரே. (11)

அடிவரவு : உய்யக் கோளரி நம்முடை வானவர் மத்துக் காய துப்பு உன்னை பால் செங்கமல அன்னம் மாணிக்கம்.

@ நெஞ்சமது என்றும் நஞ்சமுது என்றும் பாடம்.

---